நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C.No.105/2012

<u>அ.சா:2 (LW 2)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாஸ்கரராஜன். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

21.07.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

**A1, A4 Died. A2, A6 Split up to C.C 556/2023. A3, A5, A7, A8, A9 absent.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.13 மு.ப

நான் தற்பொழுது 216, ஓம் சக்தி நகர், கிருஷ்ணாபுரம், சோமனூர், கோவையில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு மெர்கண்டேல் வங்கியில் முதுநிலை மேலாளராக பணியாற்றி 31.03.2009ம் தேதி விருப்ப ஓய்வு பெற்றேன். 2004ம் வருடம் தமிழ்நாடு மெர்கண்டேல் வங்கி, கம்பம் கிளையில் மே கடைசி வாரம் நான் கிளை மேலாளராக சேர்ந்தேன். அப்பொழுது வக்கசன் மற்றும் பிலிபோஸ் ஆகியோர்கள் வர்க்கீ மற்றும் சாஜன் ஆகியோர்கள் பெயரில் தலா 5 இலட்சம் விவசாய கடனுக்கு விண்ணப்பம் செய்திருந்ததாகவும் அதை உடனடியாக பட்டுவாடா செய்ய வேண்டும் என்று என்னிடம் கேட்டிருந்தார்கள். நான் அப்பொழுது எனது உதவி மேலாளரிடமிருந்து கோப்புகளை பெற்றுள்ளதால் உடனடியாக எதுவும் செய்ய முடியாது என்று சொன்னேன். பிறகு, அவர்கள் என்னிடம் திரும்பவும் வந்து ஜூன் மாதம் நடுவில் வந்து


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:52:14 +0530

கடன் கொடுக்குமாறு கேட்டார்கள். நான் இது தொடர்பாக எனது உதவி மேலாளர் மனோகரன் என்பவரிடம் விபரம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் எனக்கு முன்பு தேவபாலன் என்பவர் மேலாளராக இருந்தபோதே அவர்களுக்கு சேமிப்பு கணக்கு தொடங்கப்பட்டு இடத்திற்கு மதிப்பீடு மற்றும் சட்ட கருத்துரை ஆகிய ஆவணங்கள் முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்டு மண்டல அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திருப்பதாக தெரிவித்தார். பிலிபோஸிஸ் என்பவர் ஏற்கனவே எங்களது வங்கியில் கிரின் லேண்ட் ஸ்பைசஸ் என்ற பெயரில் ரூ.15 இலட்சம் கடன் வாங்கி மூன்று ஆண்டுகளாக அனுபவித்து வந்தார். அவரும் அவரிடம் கணக்கராக இருந்த வக்கசன் என்பவரும் வர்க்கி மற்றும் சாஜன் ஆண்ட்ரூஸ் ஆகியோர்களுக்கு சேமிப்பு கணக்கு தொடங்கி வைத்துள்ளார்கள். என்னை ஜுன் 13, 14 தேதிகளில் அவர்கள் கடன் வழங்க போகும் இடமான நெடுங்கண்டம் ஏலக்காய் தோட்டத்திற்கு அழைத்து சென்றார்கள். நான் field visitக்காக போயிருந்தேன். 15.06.2004ம் தேதியன்று தலா ரூ.5 இலட்சம் கடன் தொகை பட்டுவாடா செய்யப்பட்டு அவரவர் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்டது. அப்பொழுது இருந்த மனோகரன் இவர்களிடம் புரோநோட், MOD மற்றும் கடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் அவர்களிடம் கையொப்பம் வாங்கி கோப்புகளில் இணைத்தார். நான் கடன் விநியோகம் செய்யவதற்கான கையொப்பத்தை மட்டும்தான் செய்தேன். நான் அன்றைய தினம்தான் வர்க்கி மற்றும் சாஜன் ஆண்ட்ரூஸ் ஆகியோர்களை முதல்முறையாக பார்த்தேன். அவர்களிடம் கடனை திரும்ப சரியாக செலுத்துமாறு மட்டும் சொன்னேன். அது வரை இந்த கடன் சம்பந்தமாக பிலிப்போஸ் மற்றும் வக்கசன் ஆகியோர்கள்தான் கடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு என்னை சந்திதார்கள். பிறகு தனது சேமிப்பு கணக்கில் வந்திருந்த கடன் தொகையை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். நான் பிலிப்போஸ் மற்றும் வக்கசன் ஆகியோர்களை ஒரு இரண்டு முறை மட்டும் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அதனால் அவர்கள் இரண்டு தடவை வட்டியை மட்டும் செலுத்திவிட்டார்கள். இது விவசாய கடன் என்பதால் தவணை என்பது ஆண்டுக்கு ஒரு முறைதான் வரும். 2005 மே மாதம் நான் முதுநிலை மேலாளராக பதவி உயர்வு பெற்று சென்னை ஜார்ஜ் டவுன் கிளையில் மாற்றப்பட்டேன். நான் அங்கு சென்று ஒரு வருடம் கழித்து இந்த


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:52:19 +0530

கடன்களில் மோசடி நடந்திருப்பதாக எனக்கு அடுத்து வந்த கிளை மேலாளர் திரு.சூரியராஜ் தெரிவித்தார். அது பற்றி நான் விசாரித்தபோது சேமிப்பு கணக்கு ஆரம்பிப்பதற்கே ஆள்மாறட்டம் நடந்திருப்பதாகவும் அதேபோல் வங்கிக்கு ஈடாக கொடுக்கப்பட்ட விவசாய நிலத்தின் மூல ஆவணங்களில் கண்டுள்ள நபர் இறந்துவிட்டதாக அவர் இறப்பு சான்று, வாரிசு சான்றிதழ் மற்றும் ஒரு பொது அதிகார பத்திரம் ஆகியவைககள் போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். அந்த போலி பொது அதிகார பத்திரம் மூலம் வர்க்கி மற்றும் சாஜன் ஆண்ட்ரூஸ் ஆகியோர்களுக்கு அந்த இடத்தை வாங்கியுள்ளார்களதாக ஆவணம் தயாரித்துள்ளார்கள் என்பது தெரிய வந்தது. அப்பொழுது இருந்த விதிகளின் படி சேமிப்பு கணக்கு ஆரம்பிக்க புகைப்படம் மற்றும் முகவரி சான்று ஆகியவைகள் இருந்தால் போதும் என்பதால் அப்பொழுது இருந்த மேலாளர் இவற்றின் அடிப்படையில் சேமிப்பு கணக்கு ஆரம்பித்துள்ளார். அன்றைய காலகட்டத்தில் சட்டக்கருத்துரை இருந்ததால் மோசடி ஆவணங்கள் பற்றி எங்கள் அலுவலக அதிகாரிகளுக்கு கண்டுபிடிக்க இயலவில்லை. பிறகு ஒரு வருடம் கழித்து தவணை கட்டாததால் நேரில் சென்று எனக்கு அடுத்த மேலாளர் விசாரித்தபோதுதான் குறிப்பிட்ட முகவரியில் எந்த நபரும் இல்லை என்பதும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மோசடியானது என்பதும் தெரியவந்தது. இந்த மோசடி சம்பந்தமாக அதன் பிறகு கிளை மேலாளராக வந்த வெங்கடேசன் என்பவர் புகார் கொடுத்துள்ளார். எனக்கு இந்த மோசடியில் சம்பந்தப்பட்ட நபர்களை பார்த்தால் அடையாள காட்ட முடியாது. ஒரு முறைதான் பார்த்திருப்பார்கள். 21 ஆண்டுகள் ஆகிவிட்டது. பிலிப்போஸ் மற்றும் வக்கசன் ஆகியோர்களை நன்றாக தெரியும். அவர்கள் அடிக்கடி வந்துள்ளார்கள். ஆனால், அவர்கள் தற்பொழுது இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். இந்த கடன்களுக்கு இந்த இரண்டு நபர்களும் ஜாமீன்தாரர்கள் ஆவார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு முன் வரவில்லை.</u>

சாட்சி தனக்கு உடல் நிலை சரியில்லை. ஏற்கனவே இருமுறை வந்து சாட்சியம் அளிக்க இயலாமல் திரும்பியுள்ளதாகவும் தனக்கு இரண்டு முறை மாறடைப்பு ஏற்பட்டு


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:52:24 +0530

நான்கு ஸ்டண்ட் பொறுத்தப்பட்டுள்ளதாகவும் கோவை அருகே தற்பொழுது வசித்து வருவதாகவும் அதனால் தன்னால் திரும்ப வர இயலாது  என்றும் மிகவும் கடினமாக இருக்கும்  என்று தெரிவித்தும் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.43 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:52:29 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 21.07.2026

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C.No.105/2012

அ.சா:3 (LW 4)சாட்சியின் சான்றுரை

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : அருணாராஜ். | | சாதி | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | மதம் | : |
| வட்டம் | : | | வயது | : |

21.07.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

**A1, A4 Died. A2, A6 Split up to C.C 556/2023. A3, A5, A7, A8, A9 absent.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை: தொடங்கப்பட்ட நேரம் 12.44 பி.ப

நான் தற்பொழுது சின்னசெங்குளம், சோழவந்தான் ரோடு, திருமங்கலத்தில் வசித்து வருகிறேன். எனது தந்தை பெயர் அழகர்சாமி. எனது தந்தைக்கு கோம்பை பூர்வீகம். திருமணம் முடித்து போடியில் நிரந்தரமாக குடியேறினார். எனது தந்தைக்கு மூன்று வாரிசுகள். நான், முருகேசன், செந்தில்குமார் வாரிசுகளாவோம். எங்களுக்கு 7 ஏக்கர் 35 செண்ட் உடுப்பன்சோலை அருகில் கல்குந்தல் என்ற இடத்தில் ஏலக்காய் போட்டிருந்தோம். எனது அப்பா வெகுநாட்கள் உடல் நிலை சரியில்லாமல் இருந்ததால் ஏலக்காய் தோட்டத்தை கவனிக்க முடியவில்லை. எனது தந்தை உடல் நிலை சரியில்லாமல் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார். அதன் பிறகு எனக்கு திருமணம் ஆகி நான் மதுரை சென்றுவிட்டேன். நான் மதுரில் ஜாக்கெட் பிட் வியாபாரம் செய்து வந்தேன். அதனால், என்னால் தோட்டத்தை


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:52:36 +0530

கவனிக்கமுடியவில்லை. அதேபோல் முருகேசன், செந்தில்குமார் ஆகியோர்கள் சிறு வயது என்பதால் பிறகு திருமணம் முடித்து அவர்கள் வாழ்க்கை என்று இருந்துவிட்டார்கள். தோட்டத்தை எங்கள் யாராலும் கவனிக்க முடியவில்லை. என் தந்தைக்கு நாங்கள்தான் வாரிசுகள். எங்களை தவிர வேறுயாரும் வாரிசும் இல்லை. ஏதோ கேரளவை சேர்ந்தவர்கள் எங்கள் இடத்தில் இருந்த மரத்தை வெட்டிவிட்டு அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். எனக்கு உடலில் பலம் இல்லாததாலும் ஆள் பலம் இல்லாததாலும் என்னால் எதுவும் செய்ய இயலவில்லை. நாங்கள் எங்கள் தோட்டத்தை யாருக்கும் எழுதி கொடுக்கவில்லை. எங்கள் தோட்டத்தை பயன்படுத்தி யாரோ ரூ.10 இலட்சம் வாங்கியுள்ளது தெரிய வந்தது. ஆனால், அவர்கள் யார் என்று தெரியாது. என்னை போலீசார் விசாரித்தார்கள். விசாரித்து எழுதிக்கொண்டார்கள். என் அப்பாவின் அசல் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று எங்கோ தொலைந்துவிட்டது.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு முன் வரவில்லை.</u>

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 01.00 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:52:41 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 21.07.2026

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C.No.105/2012

<u>அ.சா:4 (LW 5)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன். | சாதி | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | மதம் | : |
| வட்டம் | : | | வயது | : |

21.07.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

**A1, A4 Died. A2, A6 Split up to C.C 556/2023. A3, A5, A7, A8, A9 absent.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 01.00 பி.ப

நான் தற்பொழுது க.எண்.300, பாரதியார் ரோடு, ஜெய்ஹிந்த்புரம், மதுரை, சுப்பிரமணியபுரம் அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஒரு வணிக வளாகத்தில் எலக்ட்ரீசியன் மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.3 அருணாராஜ் எனது உடன் பிறந்த அண்ண ஆவார். எனது தந்தை பெயர் S.A.அழகர்சாமி ஆகும். என் தந்தைக்கு நான், எனது அண்ணன் மற்றும் எனது தம்பி செந்தில்குமார் ஆகியோர் வாரிசு ஆவோம். எனக்கு இரண்டு அக்கா சாந்தாதேவி, புவனேஷ்வரி ஆகியோர்கள் உள்ளார்கள். என் தந்தைக்கு நெடுங்குண்டம் அருகே கல்குந்தலில் 7 ஏக்கர் 35 செண்ட் ஏலக்காய் தோட்டமாக வைத்திருந்தார்.எனக்கு 15


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:52:49 +0530

வயது இருக்கும்பொழுது எனது அப்பாவிற்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தது. ஆரம்பத்தில் அந்த தோட்டத்தை எனது அண்ணனும் எனது அப்பாவும் கவனித்துக்கொண்டார்கள். பிறகு அப்பாவிற்கு உடல் நிலை சரியில்லாமல் போன பிறகு தோட்டத்தை யாரும் பார்க்கவில்லை. என் தந்தை உடல் நிலை சரியில்லாமல் 1996ல் இறந்துவிட்டார். எங்களால் எங்கள் ஏலக்காய் தோட்டத்திற்கு போக முடியவில்லை. கேரளாவை சேர்ந்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்துவிட்டு எங்களை மிரட்டினார்கள். அவர்களை எதிர்த்து வழக்கு நடத்தும் அளவிற்கு போதிய பண வசதி இல்லை. என் அப்பா இருந்தபோதே அவர்கள் பயமுறுத்தினார்கள். அதனால் நாங்கள் யாருமே எங்கள் நிலம் பக்கம் போகவில்லை. எங்கள் நிலத்தின் பெயரில் அவர்கள் மெர்கண்டேல் வங்கியில் கடன் வாங்கியதாக தெரிந்து கொண்டோம். கடன் கொடுக்கும்பொழுது இருந்த மேலாளர் சென்றுவிட்டார். அவருக்கு அடுத்து வந்தவர் போடியில் வந்து எனது அம்மாவிடம் விசாரணை மேற்கொண்டபோதுதான் இந்த விபரம் தெரிய வந்தது. அதன் பிறகு இது தொடர்பாக நான், எனது அண்ணன், தம்பி ஆகியோர்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் விசாரித்தார்கள். ஆனால், அதன் பேரில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அதன் பிறகு தற்பொழுதுதான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் என்னவென்றால் எனது தந்தையின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்றாகும். அதன் அசல் என்னவாயிற்று என்றால் அடிக்கடி வீடு மாற்றும்பொழுது எனது அம்மாவிடம் இருந்தது தொலைந்துவிட்டது. சாட்சி அடையாளம் காட்டிய அவரது தந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நகல் **அ.சா.ஆ.19** மற்றும் **அ.சா.ஆ.20**



JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:52:54 +0530

ஆகும்(**எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் மேற்கண்ட ஆவணங்கள் புகைப்பட நகல்கள் என்பதால் ஆட்சேபிக்கப்பட்டது).** என்னிடம் எனது தாயாரின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று அசல் உள்ளது. எங்கள் இடத்தை ஈடு செய்து கடன் வாங்கிய நபர்கள் யார் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. மேலாளர் சொல்லிதான் அவ்வாறு நடந்திருப்பது தெரியும்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு முன் வரவில்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 01.12 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:53:00 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 21.07.2026

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C.No.105/2012

<u>அ.சா:5 (LW 6)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

21.07.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

**A1, A4 Died. A2, A6 Split up to C.C 556/2023. A3, A5, A7, A8, A9 absent.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 02.09 பி.ப

நான் தற்பொழுது 4/162, பி.வி.கோவில் தெரு, அண்ணாமலை ஜுவல்லரி பில்டிங், உடுமலைப்பேட்டை, திருப்பூரில் வசித்து வருகிறேன். தற்பொழுது சாட்சியம் அளித்துள்ள அருணாராஜ், முருகேசன் எனது அண்ணன்கள் ஆவார். எனக்கு இரண்டு அக்கா உள்ளார்கள். எனக்கு சாந்தாதேவி, புவனேஷ்வரி என்று இரண்டு அக்கா உள்ளார்கள். எனது தந்தை பெயர் அழகர்சாமி. என் தந்தைக்கு நெடுங்குண்டம் அருகே கல்குந்தலில் 7 ஏக்கர் 35 செண்ட் ஏலக்காய் தோட்டமாக வைத்திருந்தார். எனது தந்தை பிறகு உடல்நிலை சரியில்லாமல் அந்த ஏலக்காய் தோட்டத்தை கவனிக்க இயலாமல் போடி வந்துவிட்டார். பிறகு, உடல் நிலை பாதிக்கப்பட்டு 1996ல் காலமானார்.


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:53:06 +0530

செல்வராஜ் என்பவர் ஏதோ போலி பத்திரம் ஏற்படுத்தி மோசடி செய்துவிட்டதாக போலீசார் சொன்னார்கள். எங்கள் பெயரை பயன்படுத்தி மோசடி செய்து கடன் வாங்கியதாக கேள்விபட்டேன். நான் சிறு வயதாக இருந்தபோதே இந்த மோசடி நடந்தது. என் தந்தைக்கு நான், அண்ணன்கள், எனது அக்காவை தவிர வேறு யாரும் வாரிசுகள் கிடையாது. போலீசார் விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.19 மற்றும் அ.சா.ஆ.20 ஆவணங்கள் எனக்கு ஆங்கிலம் பற்றி தெரியாததால் எனக்கு தெரியாது. எனது தந்தையின் இறப்பு சான்று, வாரிசு சான்று அசல் என்னிடம் எதுவும் இல்லை. எனது தாயார்தான் வைத்துள்ளார். எனது தாயார் தற்பொழுது உயிருடன் இல்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு முன் வரவில்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 02.17 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.21 16:53:11 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 21.07.2026